# 10 தொற்கா - தூய ஆவியின் வல்லமையால் உயிர் பெறல்

**திருத்தூதர் பணிகள் 9:36-42**

பிள்ளைகள் வகுப்புக்கு ஏனைய நாட்களை விட உற்சாகத்துடன் வந்தனர். கடந்த வாரம் கொடுத்த ஒப்படைக்கு ஏற்ப அவர்கள் ஆயத்தம் செய்த நாடகத்தை நடித்துக் காட்டும் வரை பிள்ளைகளுக்குப் பொறுமை இருக்கவில்லை.

**ஆசிரியர்** : வணக்கம் பிள்ளைகள்

**பிள்ளைகள்** : வணக்கம் ஆசிரியர்

**ஆசிரியர்** : நான் கடந்த வாரம் கொடுத்த ஒப்படைக்கு ஏற்ப திருத்தூதர் பணிகள் 9:36-42 வரை திருவிவிலியப் பகுதியை ஆக்கபூர்வமாக முன்வைப்பதற்கு ஆயத்தமாக வந்தீர்களா?

**பிள்ளைகள்** : ஆம், நாம் அந்தக் கதையை நாடகமாக நடித்துக் காட்ட ஆயத்த மாக வந்துள்ளோம்.

**ஆசிரியர்** : நல்லது, இப்போது நடித்துக்காட்ட உங்களுக்குச் சந்தர்ப்பம் தருகின்றேன்.

(பிள்ளைகள் முன்ஆயத்தம் செய்துள்ளது போன்று நியமிக்கப் பட்ட பகுதிகளை நடித்துக் காட்டுவதற்காக பொருத்தமான நிலை களில் இருத்தல்)

**கதை கூறுநர்** : இன்று உங்களுக்கு நான் கொண்டு வரும் நற்செய்தி யோப்பாவில் வசித்த - தொற்கா என்று அழைக்கப்பட்ட ''தபீத்தா'' எனும் பெயருடைய பெண் சீடர் அனுபவித்த புதுமையான நிகழ்வு பற்றியதாகும். அவளின் அனுபவத்தை - உங்கள் முன்னிலையில் பகிர்ந்து கொள்கிறேன்.

**பெண்** : ஐயோ! ஐயோ! விரைவாக வாருங்கள்; பாருங்கள் உடல்நிலை குன்றிய தபீத்தாவைப் பாருங்கள்; என்னால் இதைத் தாங்க முடியவில்லை; அவள் எங்களை விட்டுப் போய்விட்டாள்.

**கைம்பெண்கள்** : என்ன? அவள் இறந்துவிட்டாளா? ஐயோ! துக்கமாக இருக்கின்றது. அவள் எங்களுடன் இருக்கும்போது எத்தனை நன்மை செய்தாள். எவ்வளவு இரக்கச் செயல்களைப் புரிந்தாள்!

**கைம்பெண்கள்** : எம்மால் இதைத் தாங்க முடியவில்லை, கடவுளே, எம்மில் கருணை காட்டியருளும்.

**கைம்பெண்கள்** : நாம் இது குறித்து பேதுருவுக்கு அறிவிப்போம். அவரை விரைவாக வருமாறு அழைப்போம்.

**கதை கூறுநர்** : அவர்கள் மரணமடைந்த தபீத்தாவை மேல் மாடியில் கிடத்தினர் யோப்பாவுக்கு அருகிலுள்ள லித்தாவுக்கு பேதுரு வந்திருப்பதைச் சீடர்கள் கண்டு இருவரை அனுப்பி எங்களிடம் உடனே வாருங்கள் என அழைத்தனர்.

பேதுரு புறப்பட்டு வந்தார். அவர் மேல்மாடிக்குச் சென்றார்.

**கைம்பெண்கள்** : (பேதுருவின் அருகில் வந்து வேதனையுடன் அழுகின்றனர்)

**பெண்** : தொற்கா எங்களுடன் இருந்தபோது அங்கிகளையும் ஆடைகளையும் செய்து கொடுத்தாள் அவள் எங்களுடன் அன்புடன் இருந்தார். எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார்.

**பெண்** : அவள் எங்களுக்கு அதிகம் உதவி செய்திருக்கின்றார்.

**கதை கூறுநர்** : இவைகள் அனைத்தையும் கேட்ட பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். தூய ஆவியால் நிரப்பப்பட்டுப் பின்வருமாறு கூறினார்.

**பேதுரு** : ‘‘தபீத்தா எழுந்திடு’’

**தபீத்தா** : (கண்களைத் திறந்து எழுந்து உட்கார்ந்தாள்)

**கதை கூறுநர்** : பேதுரு அவளுடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார்.

இறைமக்களையும் கைம் பெண்களையும் கூப்பிட்டு அவர்கள் முன் அவளை உயிருடன் நிறுத்தினார். இது யோப்பா நகர் முழுவதும் பரவியது.

**ஆசிரியர்** : நல்லது பிள்ளைகள்
நீங்கள் நாடகத்தை ஆயத்தம் செய்து அழகாக நடித்துக் காட்டினீர்கள். நாம் இப்போது இக் கதையிலிருந்து எமது வாழ்வுக்குக் கிடைக்கும் முன்மாதிரியும் அனுபவங்களும் யாவை? என பார்ப்போம்.

**தயாளினி** : நாம் தபீத்தாவைப் போன்று நற்செயல்களைச் செய்ய வேண்டும். பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

**ஆனந்தி** : எம்மால் முடிந்தவரை பிறர் வாழ்வை வலுப்படுத்த வேண்டும்.

**தர்ஷினி** : சமூகத்தில் ஆதரவற்றோர், கைம்பெண்கள், தேவை உள்ளவர்களுக்கு தபீத்தாவைப் போன்று உதவி செய்ய வேண்டும்.

**நிமலன்** : அன்று கைம்பெண்கள், சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாக இருந்தனர். நாம் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் மீது கரிசனை செலுத்த வேண்டும்.

**தயாளினி** : பிறரின் பிரச்சினையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**செல்வன்** : நாம் தூய ஆவியின் வல்லமையை விசுவாசிக்க வேண்டும்.

**ஆசிரியர்** : எல்லோரினதும் கருத்துக்கள் சிறப்பானவைகள். செல்வனின் கருத்துக்கள் முக்கியமானது. இதில் தபீத்தாவின் வாழ்வின் நற்செயல்கள் எமக்கு முன்னுதாரணம் ஆகும். தூய ஆவியின் செயற்பாட்டினால் அவள் மரணத்திலிருந்து எழுப்பப்படல் மிக முக்கிய நிகழ்வாகும்.

## சிந்திப்போம்

இவ்வாறு தூய ஆவியின் வல்லமை மரணத்துக்கு அப்பால் செயற்படுகிறது. என்பதை காண்கின்றோம். தூய ஆவியின் செயற்பாட்டால் பலர் பலமடைகின்றனர். அன்று பலவீனமுற்ற சீடர் கூட்டம் தூய ஆவியின் வல்லமையால் மரித்தவர்களை உயிர்ப்பிக்கும் அளவில் பயமின்றிச் செயற்பட்டனர். அவர்கள் நம்பிக்கையுடன்

சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு செயற்பட்டனர். மரணத்துக்கு மேலாக செயற்பட்ட தூய ஆவியின் வழிநடத்துதல் பெற்று தபீத்தாவை மீண்டும் உயிர்ப்படையச் செய்தவை நம்பிக்கையின் செயல் ஆகும்.

அன்றுபோன்று இன்றும் தூய ஆவியானவர் செயற்படுதல் பல வல்லமை நிறைந்த செயல்கள் உலகில் அனைத்து இடங்களிலும் எப்போதும் நடைபெற்று வருகின்றது. எமது வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் எதுவுமற்ற வேளையில் தூய ஆவி வாசம் செய்து எமக்கு ஆறுதல் வழங்குகின்றார். அதனால் கிடைக்கும் அனுபவத்தை சான்றாகப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

**செயற்பாடு**

1. தூய ஆவியின் வழிகாட்டலுடன் சீடர் செயற்பட்ட இரு நிகழ்வு களைத் திருத்தூதர் பணி நூலில் கண்டுபிடித்து குறிப்பிடுக.

2. தூய ஆவியின் வல்லமையானது உமது வாழ்வில் ஆறுதல் வழங்கும் சந்தர்ப்பங்களை விபரிக்க.